27.03.2024, O.S.NO.284/2021,P.W. 2- சுல்தான் பீவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர் சவுதியில் வேலை பார்த்து வந்தார். என் கணவர் சவுதியில் இருக்கும்போது நான் அவருடன் இருந்தேன். சவுதியில் இருந்து 2007 ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து நிரந்தரமாக தங்கிவிட்டேன். எனக்கு பாஸ்போர்ட் உள்ளது. அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். அந்த பாஸ்போர்ட்டை பார்த்தால் நான் எப்போது எல்லாம் இந்தியாவிற்கு வந்தேன் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் காஜா முகைதீன் குடும்பத்தில் மகள் வழி மூத்த பேத்தி என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு என்னை விட வயதில் குறைந்த மகள் இருக்கிறாள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் நான் மூத்த பெண் இருக்கும்போது 2 ம் பிரதிவாதியின் மகளுக்கு தான் முதலில் நிக்காஹ் பேசி முடிக்கபட்டது என்றால் சரிதான். அதனால் என் அம்மாவிற்கு மற்ற 2 முதல் 6 பிரதிவாதிகளான என் 5 மாமாக்கள் மீது மனவருத்தம் உண்டு என்றால் சரியல்ல. என் அப்பா நிரந்தரமாக கடலூரில் இருந்தார். அங்கு ஆயில் மில் தொழில் செய்து வந்தார். என் அப்பாவிற்கு மேலபாளையத்தில் பல சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். என் சித்தப்பாவிற்கும் சேர்த்து இருந்தது. அதில் நிறைய சொத்துக்களை என் அப்பா கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மீதம் இருந்த சொத்துக்களை பொறுத்து என் உடன் பிறந்த சகோதரர் என் அப்பாவிடம் செட்டில்மெண்ட் எழுதி வாங்கிவிட்டார் என்றால் சரியல்ல. என் சகோதரர் புகாரி சிங்கப்பூர் பிரஜை என்றால் சரிதான். என் மற்றோரு சகோதரி கத்தாரில் இருக்கிறார். எனக்கு 3 மகன்கள். அதில் ஒருவர் வியட்நாமில் படித்து கொண்டிருக்கிறார். மற்றோருவர் மருத்துவராக இருக்கிறார். மற்றோருவர் இன்ஞ்சினியராக இருக்கிறார். நான் கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். மேலபாளையத்திற்கு வந்து செல்வேன். கதவு எண்.109/44, ஆசுரா மேலத்தெரு, மேலபாளையத்தில் உள்ளது சொந்தவீடாகும். என் அம்மா நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்கும்போது நானும், என் கணவரும் உடன் வந்தோம் என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு என் அம்மா வரவில்லை. என் கணவர் வந்துள்ளார். என் அம்மா என்ன விபரம் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். என் அம்மா

என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் பாகம் கேட்டுள்ளார். 2021ம் ஆண்டில் நான் இந்தியாவில் இருந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு தகவல் சொல்ல என் அம்மாவுடன் நானும் போய் இருந்தேன். 2004 ம் ஆண்டில் இருந்து காஜா முகைதீன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2004 ம் ஆண்டு மே மாதம் என் தம்பி புகாரிக்கு திருநெல்வேலி ரோஸ் மஹாலில் வைத்து நிக்காஹ் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்தில் என் தாத்தா காஜா முகைதீன் கலந்து கொண்டார் என்றால் சரிதான். CMC மருத்துவமனையில் என் தாத்தா சிகிச்சை எடுத்து கொண்டதை காட்டக்கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக அவை தன் மாமாக்களிடம் இருப்பதாக கூறுகிறார். என் அம்மாவிற்கு ஆதரவாக மற்றும் வழக்கிற்காக மருத்துவ ஆவணங்கள் என் மாமாக்களிடம் இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று 2ம் பிரதிவாதியிடம் மருத்துவ ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல. 08.06.2005 ம்தேதி என் சிறிய தாயார் மூத்த மகன் அன்சாரிக்கு சென்னை புதுகல்லூரி மஹாலில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்தில் என் தாத்தா காஜா முகைதீன் கலந்து கொண்டார் என்றால் சரிதான். கூட்டி கொண்டு வந்தார்கள். இந்த வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்கள் சம்பந்தமாக பாகம் கோரப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 21 இலக்க சொத்துக்களை பொறுத்து கோரப்பட்டுள்ளது. அவை எத்தனை தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்று தெரியாது. பிரதிவாதிகள் நாகூர் மீரான், சேக் முகமது ஆகியோர்கள் மைனர்களாக இருக்கும்போது அவர்கள் பெயரில் என் பாட்டி நபிஷாபீவி சொத்துக்களை வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாத்தா வாங்கி கொடுத்தார். என் தாத்தா சொத்துக்களை வாங்கி கொடுத்தார் என்பதை காட்டுவதற்கு நானோ, என் அம்மாவோ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நாகூர் மீரான், சேக் முகமது ஆகியோர்கள் பெயருக்கு சொத்துக்கள் வாங்கும்போது நான் பிறக்கவில்லை. அவர்கள் பெயரில் என் தாத்தா சொத்துக்களை வாங்கி கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நாகூர் மீரான், சேக் முகமது ஆகியோர்கள் என் பாட்டி நபிஷா பீவிக்கு நன்கொடை

ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் பத்தி 4ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் எது சரி என்று கேட்டால் எழுதி கொடுத்தது சரியல்ல என்று கூறுகிறேன். இஸ்லாமிய சட்டத்தில் அன்பினாலும், அபிமானத்தினாலும் ஒருவர் மற்றோருக்கு சொத்துக்களை எழுதி கொடுக்க உரிமை உள்ளது என்றால் சரிதான். சாகும் தருவாயிலும் இரண்டு சாட்சிகள் முன்பு சொத்துக்களை தானமாக, வாய்மொழியாக கொடுக்கலாம் என்றால் சரிதான். அம்மாதிரி தானமாக கிடைத்த சொத்துக்களை பொறுத்து தானம் பெற்றவரின் வாரிசுக்கள் இஸ்லாமிய சட்டப்படி அதில் பாகம் கோர முடியாது என்றால் சரிதான்.1ம் பிரதிவாதி இதுவரை உயிரோடு இருக்கிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி உயிரோடு இருக்கும் நிலையில் அவருக்கு கிடைத்த சொத்துக்களை பொறுத்து என் தாயார் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு கிடைத்த சொத்துக்களை பொறுத்து யாருக்கு வேண்டுமானாலும் பாத்தியபடுத்தி கொடுக்கலாம் என்றால் சரிதான். சாட்சி தானாக அவரை ஏமாற்றி எழுதி வாங்கியதாக கூறுகிறார். ஏமாற்றி எழுதி வாங்கியதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை. என்னுடைய பாட்டி ஆதியில் இருந்து பால் வியாபாரம் செய்தார் என்றால் சரிதான். பால்வியாபாரம் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து சார்பதிவாளர் முன்னிலையில் ரூ.14 ஆயிரம் கிரைய பணம் செலுத்தி பிரதிவாதிகள் நாகூர் மீரான், சேக் முகமது ஆகியோர்கள் பெயருக்கு கிரையம் வாங்கபட்டது என்றால் சரியல்ல. என் பாட்டியிடம் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பிராது 2 தபசில் சொத்தில் என் அம்மா பாகம் கேட்டாரா என்றால் எழுத்து மூலமாக கேட்கவில்லை, வாய்மொழியாக கேட்டார். எந்த மாதம், எந்ததேதியில் அவ்வாறு கேட்டார் என்று தெரியாது. என் தாயார் எந்த காலத்திலும் அவருடைய தாயாரிடம் 2வது தபசில் சொத்தை பொறுத்து பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியானவர் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு நன்கொடை மூலம் கிடைத்த சொத்துக்களை பொறுத்து செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். அவ்வாறு எழுதி கொடுத்தது சரியல்ல. அவ்வாறு எழுதி கொடுத்ததாக சொல்லுவது 21.01.2008ம்தேதியாகும். 1ம் பிரதிவாதிக்கும், 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் இடையே நடந்த சொத்து பரிவர்த்தனை குறித்து

எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தைக்கா தெரு, கதவு எண்.52 சொத்து சம்பந்தமாக என் பாட்டி ஆவணம் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு தற்போது வயது 90 க்கு மேல் இருக்கும். அவர் தற்போது 2 ம் பிரதிவாதியின் வீட்டில் இருக்கிறார். 2 ம் பிரதிவாதி தான் அவரை நன்கு கவனித்து வருகிறார் என்றால் சரிதான், எல்லோரும் பார்த்து வருகிறார்கள். காஜா முகைதீன் உயிரோடு இருக்கும்போது அவருடைய மகன்கள் அனைவரும் நன்றாக கவனித்து வந்தார்கள் என்றால் உழவன் தான் நன்கு பார்த்து கொண்டான். காஜா முகைதீன் அவருடைய சொத்துக்களை விற்றது போக மீதியுள்ள சொத்துக்களை பொறுத்து 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் 23.12.2005 ம்தேதியில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் எழுதி கொடுத்தது சரியல்ல. சாட்சி எழுதி வாங்கியிருக்கிறார்கள் என்று கூறுகிறார். 23.12.2005 ம்தேதி என் தாத்தா பத்திர பதிவு அலுவலகத்திற்கு வந்து தான் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அவரை தூக்கி கொண்டு போய் உள்ளார்கள். 23.12.2005 ம்தேதி நான் சவுதியில் இருந்தேன் என்றால் சரிதான். என் தாத்தாவை தூக்கி கொண்டு போய் பத்திரம் எழுதினார்கள் என்று யார் சொல்லி தெரியும் என்றால் என் அம்மா சொல்லி தெரியும். அந்த ஆவணம் எழுதி கொடுத்தது பற்றி என் அம்மா நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் 2005 ம் ஆண்டில் எழுதி கொடுத்தது பற்றி அப்போது என் அம்மாவிற்கு தெரியாது. அது சம்பந்தமாக என் அம்மா என்ன சாட்சி கூறியுள்ளார் என்று எனக்கு தெரியும். உழவனின் முகவரி என்ன என்றால் நான் தாக்கல் செய்கிறேன். சொத்துக்களை வாங்கும்போதும், விற்கும்போதும் பதிவாளர் அலுவலகத்தில் என்னென்ன நடைமுறைகள் பின்பற்றுவார்கள் என்ற விபரம் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் அவ்வளவாக தெரியாது. ஒரு ஆவணம் பதிவு செய்வதற்கு முன்னர் சொத்தை எழுதி கொடுப்பவரை பார்த்து பதிவாளர் பத்திரத்தை பதிவு செய்யலாமா, ஒப்பு கொள்கிறீர்களா என்று கேட்பார் என்றால் சரிதான். அதன்பின்னர் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள் கைரேகை சம்பந்தபட்ட பதிவேட்டில் பெற்று கையெழுத்து வாங்குவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் பதியும்போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. உழவன் கணேசன் தான் என் தாத்தாவின் பெருவிரலை பிடித்து கைரேகை

வைத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெற்றோருக்கு ஆவணம் குறித்து 2021ம் ஆண்டில் எந்த மாதம், எந்ததேதியில் தெரியும் என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்திற்கு நான் தான் விபரம் சொன்னேன். என் அம்மா சொன்ன விபரத்தின் அடிப்படையில் நான் விபரம் சொன்னேன். என் சிறிய தாயார் 7ம் பிரதிவாதி வசம் file இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை. 2019 ம் ஆண்டில் மேற்படி file ஐ என் சிறிய தாயார் 2 ம் பிரதிவாதி வசம் கொடுத்துவிட்டார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை. என் மாமாக்கள் பெயருக்கு பட்டா, தீர்வை ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் என் அம்மாவிற்கும் அனுபவ பாத்தியம் உண்டு. என் அம்மா பெயருக்கு பட்டா, தீர்வை கிடையாது என்றால் சரிதான். என் அம்மாவிற்கு அனுபவ பாத்தியம் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். 2008 ம் ஆண்டில் என் தாத்தா காஜா முகைதீன் இறந்துவிட்டார். என் தாத்தா உயிரோடு இருக்கும்போது என் அம்மா பாகம் கேட்கவில்லை. 2021ம் ஆண்டில் தான் ஆவணங்கள் பற்றிய விபரங்கள் தெரியும் என்று நானும், என் அம்மாவும் பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. 2007ம் ஆண்டு ஹதர் அலியின் விசேசத்தில் என் தாத்தா வீல் சேரில் அமர்ந்து போட்டோ எடுத்துள்ளார் என்றால் அந்த கால கட்டத்தில் நிதானம் இல்லாமல் இருந்தார். 7ம் பிரதிவாதி எனக்கு சிறிய தாயார் மற்றும் என் மச்சானின் மனைவி ஆவார். 8ம் பிரதிவாதியின் மகளின் திருமணத்திற்கு 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அழைப்பு இல்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. சொத்து தகராறு தான் அதற்கு காரணமா என்றால் எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டில் இருந்து 2008 ம் ஆண்டு இறக்கும் வரை என் தாத்தா சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிற்கு ஆதரவாக அவ்வாறு என் தாத்தா சுயநினைவு இல்லாமல் இருந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரம் தெரியாது என்றும், என் அம்மா சொல்லி கொடுத்து அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு அவர்

கோரியுள்ள பரிகாரம் கிடைக்காது என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.